**<u>நீதித்துறை நடுவர் எண்.1நீதிமன்றம், இராமநாதபுரம்</u>**

**முன்னிலை : திரு. N. நிலவேஸ்வரன் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, இராமநாதபுரம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை**

<u>CIS. Crl.M.P.No.225/2026</u>

<u>CNR No. TNRM 02- 000655-2026</u>

ரமேஷ்கண்ணன்,
S/o. பொன்னுசாமி,
2/47, கடலாடி,
ஓடைக்குளம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

... மனுதாரர்/எதிரி

-- எதிராக --

அரசுக்காக காவல் ஆய்வாளர் அவர்கள்,
திருப்புல்லாணி காவல் நிலையம்,
இராமநாதபுரம் மாவட்டம்.
குற்ற எண் : 165/2025.

... எதிர்மனுதாரர்/அரசு
குற்றமுறையிடுவோர்

மனுதாரர்/எதிரி தரப்பில் BNSS பிரிவு 497 மற்றும் 503-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு 24.02.2026 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதார்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.கிருபாகரசேகர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/அரசு குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், பதிலுரை தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி, இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## உ த் த ர வு

இம்மனுவானது திருப்புல்லாணி காவல் நிலைய குற்ற எண்.165/2025 –ல், சட்டப்பிரிவு 25(1A) Arms Act ன் கீழான வழக்கில், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தாக Samsung Galaxy என்ற செல்போன் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற பொறுப்பில் ஒப்படைக்காமல் இருந்து வருகிறது என்றும், மேற்படி செல்போனை ஒப்படைத்து, இடைக்கால பொறுப்பில் வழங்ககோரி இம்மனு மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்/ எதிரி தரப்பு மனு மற்றும் வாதம் :–**

**1.** I am the petitioner herein and sole accused in Crime No: 165/2025 on the file of the respondent police and I am well acquainted with the facts of the case.

**2.** I submit that I was arrested in the above crime no 18.10.2025 and subsequently enlarged on bail in Crl.M.P.No. 2406 of 2025 on 24/10/2025 after the prosecution projected recovery of an alleged sword and examination of witnesses, upon which bail came to be granted.

**3.** I respectfully submit that apart from the alleged recovery shown in the prosecution case, my personal valuables namely two gold rings, one gold kada, two gold chains and wrist watches including Titan watch were taken into custody by the police officials at the time of arrest without any seizure acknowledgment or attested inventory as true procedure of law dictates.

**4.** I further submit that my Samsung Galaxy S22 Ultra mobile phone bearing IMEI No: 355476620538465 along with SIM bearing No: 9095182118 Was also retained by the investigating officials without following due procedure.

**5.** I state that after grant of bail, the above personal belongings continued to remain with the respondent police without lawful justification.

**6.** I respectfully submit that after grant of bail in Crl.M.P.No: 2406 of 2025 dated: 24.10.2025 the respondent police initiated proceedings seeking cancellation of the bail granted to me by filing a petition before the learned Principal Sessions Court, Ramanathapuram in Crl.M.P. No: 2627 of 2025 alleging non-compliance of bail conditions and the bail cancellation petition filed against me ultimately did not succeed and the proceedings culminated in my favour by 13.02.2026 thereby affirming that there was no wilful violation or misuse of bail liberty on my part.

**7.** I respectfully submit that thereafter I preferred a petition seeking modification of bail condition imposed in the present crime before the learned Principal Sessions Court, Ramanathapuram in Crl.M.P.no. 298 of 2026, the learned Principal sessions Judge, Ramanathapuram, by order dated 13.02.2026 was pleased to consider the subsequent order and modified the earlier bail condition imposed in Crl.M.P.No. 2406 of 2025 by directing that I shall appear before the Inspector of police, CBCID Police Station, Virudhunagar, instead of Thallakulam Police Station, Madurai, and the said modification was granted in my favour.

**8.** I respectfully submit that on 18.02.2026 while complying with appearance before CBCID, Virudhunagar pursuant to above Court order. I received summon from Thiruppullani police station directing my appearance on 19.02.2026 at about 1.00 p.m.

**9.** In obedience to the summons, I appeared before the police station along with my advocates, which fact is verifiable through CCTV cameras installed in the police station premises in hope that I might be done justice with my personal articles returned to me and also to comply with any lawful investigation about to be conducted by the police officials.

**10.** Upon my arrival, instead of returning my belongings, I was confined inside the room of the Investigating Officer and denied access to my advocate when requested as my right.

**11.** The Investigating officer compelled me to write a representation in my own handwriting stating that all my personal belongings had been returned and further directing me to write that the mobile phone was voluntarily handed over by me for investigation purposes.

**12.** I respectfully submit that the said statement was not voluntary and was written only under intimidation and threat that I would not be permitted to leave the police station unless I complied with the directions issued and attest my signature to it.

**13.** Out of fear and coercion, I signed the dictated representation and was thereafter allowed to leave the premises.

**14.** I submit that the personal mobile phone continue to remain unlawfully retained by the respondent police under the guise of a coerced representation.

**15.** The events that transpired inside the police station between 1.00 p.m and 3.00 p.m on 19.02.2026 are fully captured in the CCTV surveillance maintained within the police station premises. So preservation and production of the said CCTV footage alone would demonstrate the coercive circumstances under which the representation was obtained from me.

**16.** I submit that the continued retention of my personal mobile phone has caused severe hardship to me as the said device contains my personal data, contacts, professional communications and materials required for my day-to-day affairs and livelihood thereby causing substantial inconvenience and prejudice.

**17.** It is submitted that the continued retention of my mobile phone serves no investigative purpose and amounts to deprivation of property otherwise protected under law as the alleged property in this above-mentioned FIR were all recovered and investigation reached the tipping point of examination of three witness when the bail petition was allowed on 24.10.2025.

**18.** It is submitted that I have annexed the screen shot that shows the above device with the IMEI number added to my devices section of my Samsung account in order to prove my ownership.

**19.** I therefore humbly that this Hon'ble Court may be pleased to direct the respondent police to produce the said mobile phone before this Hon'ble Court and grant interim custody of the same to me pending investigation and further proceedings.

**20.** I undertake before this Hon'ble Court that upon interim custody being granted:

i) I shall not tamper with alter, reset of modify the contents of the mobile phone;

ii) I shall not sell, alienate or part with possession of the device;

iii) I am ready and willing to furnish sufficient surety as may be directed by this Hon'ble Court.

iv) I shall produce the mobile phone before this Hon'ble Court Investigating Agency whenever directed in future proceedings.

**21.** I also further state that grant of interim custody would adequately balance investigative interest and my personal hardship while safeguarding the property under supervision of this Hon'ble Court.

<u>எதிர்மனுதாரர்/அரசுத்தரப்பு பதிலுரையின் சுருக்கம் மற்றும் வாதம்:–</u>

இந்த மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் பேரில் எதிர்மனுதாரர்/அரசுத்தரப்பில் அறிவிப்பு கோரப்பட்டது. அந்த பதிலுரையில் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை உட்கோட்டம், திருப்புல்லாணி காவல் நிலையத்தில் கடந்த 18.10.2025ம் தேதி பதிவு செய்யப்பட்ட திருப்புல்லாணி காவல் நிலைய குற்ற எண். 165/2025 சட்டப்பிரிவு 25 (1A) Arms Act வழக்கின் எதிரியான ரமேஷ்கண்ணா 38/25, த/பெ. பொன்னுசாமி 2/47 ஓடைக்குளம், கீழக்கிடாரம் (Post) கடலாடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை கடந்த 18.10.2025ம் தேதி கைது செய்து கனம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, இராமநாதபுரம் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு இராமநாதபுரம் மாவட்ட சிறையில் இருந்து வந்தவர் இராமநாதபுரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற Crl.M.P.No: 2406/2025 நாள். 24.10.2025 ன் படி நிபந்தனை ஜாமினில் வெளிவந்தவருக்கு மேற்படி வழக்கு சம்மந்தமாக கடந்த 19.02.2026 ம் தேதி மதியம் 13.00 மணிக்கு விசாரணைக்கு ஆஜராக சம்மன் சார்பு செய்யப்பட்டு அதன் பேரில் விசாரணைக்கு ஆஜரானவர் தான் பயன்படுத்திய Samsung Galaxy செல்போனை ஆஜர் செய்ததை படிவம் 91 ல் கைப்பற்றிய செல்போனை கனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பார்வை 2 ல் கண்ட வழக்கில் மேற்படி எதிரியானவர் அய்யா அப்துல்கலாம் அவர்களின் கனவு திட்டமாக அசையா சொத்துக்களை அறக்கட்டளை மூலம் ஏலம் விட்டு அதில் வரும் பணத்தை ஏழை எளியவர்களுக்கு கொடுப்பதாக சொல்லி சுமார் ரூபாய் 11 கோடிக்கு மேல் பணம் பெற்று மோசடி செய்து ஏமாற்றியுள்ளது தெரிய வந்ததால் பார்வையில் கண்ட வழக்கு பதிவு செய்து விசாரணையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கின் புலன் விசாரணையில் வழக்கு சம்மந்தமான முக்கிய தடயங்களான எதிரி பயன்படுத்தி வந்த வாட்ஸப் செயலிகள், குரல் பதிவுகள், குறுஞ்செய்திகள், இராஜபாளையும் மற்றும் இராமநாதபுரத்தில் வைத்து பாதிக்கப்பட்டவர்களுடன் கூட்டம் நடத்தியற்கான புகைப்படங்கள், வீடியோக்கள், பணபரிவர்த்தனைக்கு பயன்படுத்திய செயலிகள், மோசடியாக தயார் செய்யப்பட்ட RBI சம்மந்தப்பட்ட ஆவணங்கள், செல்போன் அழைப்புகள், எதிரியின் உள்நாடு மற்றும் வெளிநாட்டு விமான பயணம் சம்மந்தமான மின்னஞ்சல் பரிமாற்றம் போன்ற தடயங்கள் ஆகியவைகள் மேற்படி செல்போனில் இருப்பதாக CBCID புலன் விசாரணையில் புலனாவதாக தெரிய வருகிறது. பார்வை 1 மற்றும் பார்வை 2 ல் குறிப்பிட்டுள்ள வழக்குகளின் புலன் விசாரணைக்கு அவசியமான தரவுகளை பெற வேண்டி மேற்படி செல்போன் தடயவியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என்பது எனது புலன் விசாரணையில் புலனாகிறது. மேற்படி எதிரியிடம் செல்போனை ஒப்படைத்தால் செல்போனில் உள்ள தரவுகளை அழிப்பதற்கும், செல்போனை மறைப்பதற்கும் வாய்ப்புள்ளதாலும், மேற்படி எதிரியானவர் பொருளாதார குற்றம் மற்றும் மோசடியில் ஈடுபட்டதற்கான ஆதாரம் தங்களது நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு PR No: 38/2026 ன் படி பெறப்பட்ட அந்த

செல்போனில் இருப்பதாலும் விருதநகர் CBCID விசாரணை அதிகாரி மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி ஆய்வறிக்கை பெற வேண்டியுள்ளதாலும் எதிரி பயன்படுத்திய Samsung Galaxy செல்போனை எதிரியிடம் ஒப்படைக்க மிக மிக கடுமையான ஆட்சேபனை தெரிவித்தும் விருதுநகர் CBCID வசம் செல்போனை ஒப்படைக்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும் பார்வை–1ல் கண்ட திருப்புல்லாணி காவல் நிலைய குற்ற வழக்கு சம்மந்தமாக ஏதேனும் தகவல்கள் தேவைப்பட்டால் விருதுநகர், CBCID வசமிருந்து பெற்றுக்கொள்கிறோம் என்று அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தீர்வு :–**

i) இம்மனுவில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்குக்கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது.

ii) மனுதாரர் தரப்பில் மேற்படி செல்போனானது இவ்வழக்கில் தவறாக கைப்பற்றப்பட்டது என்று வாதிடப்பட்டது. ஆனால் இது குறித்து இவ்வழக்கு விசாரணையில் சமர்ப்பிக்கப்படும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் முழு நீதிமன்ற விசாரணையின் முடிவில் தான் அறிய முடியுமே தவிர தற்போதுள்ள சூழ்நிலையில் எதுவும் அறிவதற்கு இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

iii) மனுதாரர் தரப்பில் காவல் நிலையத்தில் 19.02.2026ம் தேதி மதியம் 01.00 மணியளவில் ஆஜராவதற்கு அழைப்பாணை வரப்பெற்றது என்றும் அதன்பேரில் வழக்கறிஞருடன் ஆஜரானபோது புலன் விசாரணை அதிகாரி சட்டத்திற்கு புறம்பாக நடந்து கொண்டார் என்று எடுத்துரைத்த போதிலும் மேற்படி சம்மன் எதுவும் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் ஆஜர் செய்யவில்லை. மேலும் மேற்படி மனுதாரர் கோரும் சங்கதிக்கு அவருக்கு மாற்றுத் தீர்வு வழி உள்ளது. ஆனால் இம்மனுவானது வழக்குச்சொத்தினை இடைக்கால பொறுப்பில் பெற வேண்டி மட்டுமே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதாவது மனுதாரர் கேட்கும் பரிகாரமானது வழக்குச்சொத்தினை பொறுத்து சட்டப்பிரிவுகள் 497 மற்றும் 503 BNSS ன்

அடிப்படையில் மட்டுமே கோரப்பட்டுள்ளது. மேலும் பரிகாரம் தொடர்புடைய மனு சங்கதிகளை மட்டுமே இந்நீதிமன்றத்தில் இம்மனுவினை பொறுத்து தீர்மானிக்க இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

iv) மேலும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தானது திருப்புல்லாணி காவல் நிலைய குற்ற எண்.165/2025 மற்றும் விருதுநகர் CBCID குற்ற எண்.02/2025 வழக்குகளின் புலன் விசாரணைக்கு அவசியமான தரவுகளை பெற வேண்டி செல்போன் தடயவியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என்று அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்குகளின் பொருட்டு மேற்படி வழக்கு சொத்தானது தற்போது தடயவியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய அவசிய நிலை அரசு தரப்பிற்கு உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

v) மேலும் அரசு தரப்பில் விருதுநகர் CBCID குற்ற எண்.02/2025 என்ற வழக்கின் புலன் விசாரணையில் வழக்கு சம்மந்தமான முக்கிய தடயங்களான எதிரி பயன்படுத்தி வந்த வாட்சப் செயலிகள், குரல் பதிவுகள், குறுஞ்செய்திகள், இராஜபாளையம் மற்றும் இராமநாதபுரத்தில் வைத்து பாதிக்கப்பட்டவர்களுடன் கூட்டம் நடத்தியதற்கான புகைப்படங்கள், வீடியோக்கள், பண பரிவர்த்தனைக்கு பயன்படுத்திய செயலிகள், மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆர்பிஐ சம்மந்தமான ஆவணங்கள், செல்போன் அழைப்புகள், எதிரியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணம் சம்மந்தமான மின்னஞ்சல் பரிமாற்றம் போன்ற தடயங்கள் ஆகியவைகள் மேற்படி செல்போனில் இருப்பதாக CBCID புலன் விசாரணையில் புலனாவதாக தெரிய வருகிறது என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச்சொத்தானது மேற்படி விருதுநகர் CBCID குற்ற எண்.02/2025 வழக்கின் புலன் விசாரணைக்கும் அவசியம் தேவைப்படுகிறது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

vi) மேலும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில் விருதுநகர் நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்ற கடித எண்.359 நாள்.09.03.2026 உரிய வழி மூலம் மாண்புமிகு விருதுநகர் மாவட்ட தலைமை குற்றத்துறை நடுவர் அவர்களின் கடித எண். 408/2026 நாள். 10.03.2026 இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தினை பரிசீலனை செய்கையில் விருதுநகர் CBCID குற்ற எண்.02/2025 வழக்கின் புலன் விசாரணையின் பொருட்டு மேற்படி வழக்குச்சொத்தானது விருதுநகர் மாவட்ட நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றத்திற்கு தேவைப்படுவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்குச்சொத்தானது மேற்படி வழக்கிற்கு தேவைப்படுகிறது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

vii) மேலும் மனுதாரர் தரப்பில் வழக்குச்சொத்தின் உரிமைத்தன்மை குறித்து எத்தகைய ஆவணங்களும் சமர்ப்பிக்கவில்லை. எனவே மனுதாரரின் உரிமைத்தன்மை குறித்து எதுவும் அறிய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

Viii) மேற்கண்ட நீதிமன்ற பரிசீலனையின் அடிப்படையில் தற்போது வழக்குச்சொத்தினை குறித்து மனுதாரர் கோரும் மனுப்பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ix) முடிவாக மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இன்று 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11–ஆம் நாள் இவ்வுத்தரவு என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

N NILAVESHWARAN

Digitally signed by N NILAVESHWARAN
Date: 2026.03.11 04:47:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.